# இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை

## மே 2014




பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் ஒன்றியம் கொழும்பில் எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்துகின்றது. மே 16 அன்று 17 அமைதியான மாணவ எதிர்ப்பாளர்கள் தடுத்து வைக்கப்பட்டதுடன், பெருமாளவானோர் பொலிசாரினால் சித்திரவதை செய்யப்பட்டனர்.

INFORM
Human Rights Documentation Centre
informcolombo@gmail.com

## உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்


அ. **எதிர்ப்பொன்றை ஒழுங்குபடுத்தியமைக்காக மனித வளப் பணிப்பாளர்/அரசியல் கட்சியின் செயற்பாட்டாளர் கைது**

ஆ. **பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்**

இ. **ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல்**

ஈ. **எதிர் அரசியல் கட்சிகளை அடக்குதல்**

உ. **தமிழ் மக்களினாலான நினைவுகூரலில் அடக்குமுறை**


*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் INFORM நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

# சாராம்சம்

மே 1 (மே தினம்), மே 3 (உலக பத்திரிகைச் சுதந்திர தினம்) மற்றும் மே 18 (யுத்தம் முடிவடைந்த பின்னர் 5 ஆண்டுகள்) ஆகியன மூன்று குறிப்பிடத்தக்க தினங்களாகும். இவை இலங்கையின் சமூகத்தில் பிளவுகளையும், ஆட்சி ஆதிக்கத்திலான கொள்கையுடைய அரசாங்கமொன்றினால் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறையையும் வெளிப்படுத்துகின்றன. தொழிலாளர்களின் உரிமைகளுக்கான ஐக்கியப்படுத்தப்பட்ட முன்னணியொன்றாக விளங்குவதை விட, அரசாங்க சார்பிலானதும், அரசாங்கத்திற்கு எதிரானதுமான பரிமாணமொன்றை மே தினப் பேரணிகள் எடுத்துக்காட்டின. மே தினத்தன்று, கொழும்பில் தமது வருடாந்த மே தினப் பேரணியைப் பொலிசார் தடுத்ததாக அரசாங்கத்தை விமர்சிக்கின்ற தொழிற்சங்கக் கூட்டணி முறைப்பாடு செய்துள்ளது. பின்னர் அம்மாதத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். மே 3 அன்று உலக பத்திரிகைச் சுதந்திர தினத்தை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாகத் தோன்றுகின்றது. அதேவேளை, தகவலுக்கான உரிமைக்கான ஓர் இயக்கம் அத்துடன், ஜனநாயக ஆட்சியும், ஊடக சுதந்திரமும்| மீது பகிரங்கச் சொற்பொழிவு என இரு பாரிய நிகழ்ச்சிகளை ஊடகம்சார்ந்த குழுக்கள் ஒழுங்குசெய்திருந்தன. இலங்கையின் சமூகத்தில் ஆழமான இனத்துவ முரண்பாட்டினை மே 18 நிகழ்ச்சிகள் வெளிக்கொண்டு வந்தன. அரசாங்கத்தின் 'வெற்றிப் பேரணியில்' கலந்து கொண்ட பெரும்பான்மையானோர் சிங்களவர்களாக விளங்கிய அதேவேளை, விசேடமாக வடக்கில் பெரும்பான்மையான தமிழர்கள் இறந்தவர்களையும், காணாமல்போனவர்களையும் அத்துடன் யுத்தத்தின் போது தாம் அனுபவித்த சகல கஷ்டங்களையும் நினைவுகூரும் வகையில் அத்தினத்தைக் கழித்தனர்.

இரு மறுதலையிலான வழிகளில் இளைஞர்கள் முக்கியத்துவத்தைப் பெறும் மாதமொன்றாக மே மாதம் விளங்கியது. தரமான கல்விக்கும், சுதந்திரமான கல்விக்குமான தமது உரிமைக்காகப் போராடும் இலங்கையின் பல்கலைக்கழக மாணவர்கள் அவர்களது போராட்டங்களை நிறுத்துமாறு அச்சுறுத்தப்பட்டனர், கைது செய்யப்பட்டனர். அத்துடன் சித்திரவதையும் செய்யப்பட்டனர். அதேவேளை, உலக இளைஞர் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக வந்த நூற்றுக்கணக்கான நாடுகளின் இளைஞர்களை இலங்கை அரசாங்கம் விருந்தோம்பி, அதைப் பாரிய நிகழ்ச்சியொன்றாக காட்சிப்படுத்தியது. பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்கள், யுத்தத்தின் தாக்கங்கள், மனித உரிமைகளின் நிலைமைகள், இலங்கையில் சட்டத்தின் ஆட்சி ஆகியன பற்றி அறிவதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை எனவும், அரசாங்கத்தின் உயர் பிரதிநிதிகளிடம் சில பேராளர்களினால் முன்வைக்கப்பட்ட பொறுப்புக்கூறுதல் மீதான சில கேள்விகள் தட்டிக்கழிக்கப்பட்டதாகவும் பெருமளவு பேராளர்கள் INFORMக்கு கூறினார்கள். நைஜீரியாவில் சிறுமிகளின் ஆட்கடத்தல் பற்றி பத்திரிகை மகாநாடொன்றை நடத்துவதிலிருந்து உலக இளைஞர் மகாநாட்டின் பேராளர்களை அமைச்சர் ஒருவர் தடுத்ததுடன், இதையிட்டு சில பேராளர்கள் எதிர்ப்பினையும் வெளியிட்டிருந்தனர்.

மே தின பேரணியொன்றில் இதழியலாளர் ஒருவரை அரசாங்க அமைச்சர் ஒருவர் தள்ளுவதிலிருந்து மே தினத்தன்று பேச்சு சுதந்திரத்தின் அடக்குமுறை ஆரம்பித்தது. மாதத்தின் ஆரம்பத்தில் இதழியலாளர் ஒருவரை ஆட்கடத்துவதற்கும், தாக்குவதற்குமான முயற்சியொன்றிருந்தது. நீதிமன்ற வழக்கொன்றில் செய்தி சேகரிப்பதற்காக சென்றிருந்த ஊடகங்கள் மீது பொலிசார் தன்னிச்சையாக தடை விதித்தனர், இதழியலாளர்களுக்கு பயிற்சிச் செயலமர்வொன்றை இராணுவம் நிறுத்தியது அத்துடன் ஓர் எதிர்க்கட்சி அரசியல்வாதியான முன்னணிவாய்ந்ததும், விருதுகளை வெற்றியீட்டியதுமான நடிகர் ஒருவர் நடித்த புதிய திரைப்படமொன்றின் விளம்பர 'கட் அவுட்'வொன்றை பொலிசார் அகற்றினர். ஏற்கனவே தடைசெய்யப்பட்ட இணைய தளங்களின் பட்டியலுக்கு மே மாதத்தில் இரு இணையதளங்கள் சேர்க்கப்பட்டன.

தமிழ் அரசியல் கட்சிகளை அடக்குவதும் தொடர்ந்தது. ஒரு தமிழ் அரசியல்வாதி/மனித உரிமைகளுக்கு பாதுகாப்பளிப்பவர் கைது செய்யப்பட்டமை, தமிழ் அரசியல்வாதிகளின் வீடுகள் இராணுவத்தினால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப்பட்டமை அத்துடன் பாரிய தமிழ் அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பினை தேசத்துரோகத்திலான கட்சியென அரசாங்க அமைச்சரொருவர் குற்றஞ்சாட்டியமை என அறிக்கைகள் இருந்தன. யுத்தம் முடிவடைந்து 5 வருடங்களின் பின் மே 18 அன்று அரசாங்கம் அதன் 'வெற்றிப் பேரணியையும்,' கொண்டாட்டங்களையும் நடத்தியது. ஆனால், வடக்கில், கடந்த காலத்தைப்

போன்று, கொலைசெய்யப்பட்டதும், காணாமல்போனதுமான தமது அன்பானவர்களுக்காக துக்கத்தை அனுஷ்டிப்பதிலும், அவர்களை நினைவுகூருவதிலும் அத்தினத்தைக் கழிப்பதற்கு தமிழ் மக்கள் தூண்டப்பட்டனர். இவ்வைபவங்களை மிருகத்தனத்துடன் இராணுவத்தினரும், பொலிசாரும் தடுத்ததுடன், மலர்கள் மற்றும் விளக்குகள் போன்ற அடையாளப் பொருட்களை மிதித்து, தாக்குதலும் நடத்தினர். அத்துடன் சமய வைபவங்களைத் தடைசெய்தனர். சமய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் சென்ற மதகுருமார்களையும், விசுவாசிகளையும் விசாரணை செய்ததுடன், அவர்களைத் தடுத்துநிறுத்தினர். அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களையும், நூற்கல்வியாளர்களையும் மற்றும் இதழியலாளர்களையும் அச்சுறுத்தினர். தமிழ் அரசியல் கட்சிக் காரியாலயங்கள், தமிழ் செய்திப்பத்திரிகை அலுவலகங்கள், சமய வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பொதுவாகவே வட மாகாணம் ஆகியவற்றில் அதிகளவிலான இராணுவத்தின் பிரசன்னம் மறைமுகமான அச்சுறுத்தலொன்றாக விளங்கியது. மரணமானவர்களை நினைவுகூருவதற்காக சமய கலாசார நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிப்பதில் வரலாற்றொன்றைக் கொண்டுள்ள மாணவர்கள் கற்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வாரமொன்றுக்கு மூடப்பட்டது.

முன்னைய மாதங்களையும், வருடங்களையும் போன்று, பெருமளவு சம்பவங்களுக்கு அரசாங்க அமைச்சர்களும், பொலிசாரும் மற்றும் இராணுவத்தினரும் நேரடியாகப் பொறுப்பினைக் கொண்டிருந்தனர். அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டு சில சம்பவங்களையிட்டு பரந்தளவிலான ஊடகங்களின் செய்திகள் உட்பட தெளிவான சாட்சியங்கள் கிட்டிய போதிலும், அவர்கள் முற்றுமுழுதான விலக்கீட்டுரிமையை அனுபவித்துள்ளதாகத் தோன்றுகின்றது.

## அ. எதிர்ப்பொன்றை ஒழுங்குபடுத்தியமைக்காக மனித வளப் பணிப்பாளர்/அரசியல் கட்சியின் செயற்பாட்டாளர் கைது

### 1. தமிழ் அரசியல் கட்சியொன்றின் மனித வளப் பணிப்பாளர்/அமைப்பாளர் கைது

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் (த.தே.ம.மு.) கிளிநொச்சி அமைப்பாளர் திரு.தங்கராஜ் ஜெகதீஸ்வரன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் 2014 மே 23 அன்று கைதுசெய்யப்பட்டதாக த.தே.ம.முன்னணியைக் குறிப்பிட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இடம்பெயர்ந்த கிளிநொச்சி குடியிருப்பாளர்களின் மீள்குடியேற்றத்தை முடிக்குமாறும், தமது காணியை இராணுவம் பலவந்தமாகப் பொறுப்பேற்பதைத் தடுக்குமாறும் அரசாங்கத்திடம் கோரி 2014 மே 26 அன்று திட்டமிடப்பட்ட எதிர்ப்பொன்றை ஒழுங்குபடுத்தியமைக்காக திரு.ஜெகதீஸ்வரன் கைது செய்யப்பட்டார். எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு கிளிநொச்சிப் பொலிசிலிருந்து அனுமதியைக் கோரி கடிதமொன்றைக் கையளித்த பின்னர், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அவர் உடனடியாக வரவழைக்கப்பட்டு, எதிர்ப்பை கைவிடுமாறு வலியுறுத்தப்பட்டார். எல்.ரி.ரி.ஈ.ஐப் புத்துயிரளிப்பதற்கு வேலை செய்கிறார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே திரு.ஜெகதீஸ்வரன் கைது செய்யப்பட்டதாக ஊடகங்களுக்கு பொலிஸ் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.[1]

## ஆ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்

### 2. பாதுகாப்புச் செயலாளர் நீதிமன்றத்தில் ஆஜராவதைச் செய்தியாக்குவதிலிருந்து ஊடகங்களுக்கு தடையும், அச்சுறுத்தலும்

பாதுகாப்புச் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான திரு.கோத்தாபய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட மானநஷ்டாஈட்டு வழக்கொன்றில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகங்களைப் பொலிசார் தடை செய்தமை குறித்து அதன் ஆழ்ந்த கரிசனையை இலங்கை சுதந்திர ஊடக இயக்கம் (Free Media Movement - FMM) 2014 மே 28 அன்று விடுத்த அறிக்கையொன்றில் வெளிப்படுத்தியிருந்தது. சட்டத்தரணி திரு.எம்.ஏ.சுமந்திரனால் திரு. ராஜபக்ஷ குறுக்கு விசாரணை செய்வதையிட்டு செய்தி சேகரிப்பதற்கு ஊடகங்களுக்கு பொலிசார் அனுமதிக்கவில்லை என்பதுடன், நீதிமன்றத்திற்கு திரு. ராஜபக்ஷ வருவதையும், அதிலிருந்து வெளியேறுவதையும் படமாக்க வேண்டாம் என ஊடகங்களுக்கு எச்சரிக்கையும் செய்தனர்.[2] ஏதேனும் நீதிமன்ற வழக்குகளில் இவ்வாறு செய்தி சேகரிக்கப்படுவது வழமை என்பதுடன், சகல ஏனைய வழக்கு விசாரணைகள் ஊடகங்களுக்கு பகிரங்கமாக இருக்கும் போது, திரு.கோத்தாபய ராஜபக்ஷ ஏன் சலுகையுடன்கூடிய விதத்தில் நடத்தப்பட்டார் என அதன் அறிக்கையில் FMM கேள்வியெழுப்பியிருந்தது. கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் மோட்டார் கார் பவனியாக வருவதை ஊடக ஆளணியினர் படமாக்கினால் அவர்கள் மாதக்கணக்கில் அல்லது ஆண்டுக்கணக்கில் தடுப்புக்காவலில் இருக்க நேரிடும் என உயர் பதவியிலான பொலிஸ் அதிகாரியொருவர் அச்சுறுத்துவதை பீ.பீ.சி.இன் சிங்களச் சேவையில் வெளியிடப்பட்ட 'வீடியோ' நறுக்கொன்று காட்டுகின்றது.

2014 மே 27 அன்று, 2008இல் வெளியிடப்பட்ட ஒரு தொடரிலான கட்டுரைகள் தொடர்பில் 'சண்டே லீடர்' செய்திப்பத்திரிகைக்கு எதிராக திரு. ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர் சாட்சியமளித்தார். இலங்கை விமானப் படைக்கு போரிடும் MiG விமானங்களை வாங்குவதில் பாரிய ஊழல் இடம்பெற்றிருந்ததாக இப்பத்திரிகை சார்த்துரைத்திருந்தது. இது பொதுசன அக்கறையொன்றைக் கொண்ட வழக்கு என்பதுடன், வழக்கின் விசாரணைகளையிட்டு செய்தி சேகரிப்பதற்கு ஊடகங்களைத் தடைசெய்வது தகவலுக்கான மக்களின் உரிமையின் தெளிவான மீறலொன்றாகும்.[3]

---

[1] https://www.srilankamirror.com/news/15117-tnpf-k-nochchi-organiser-arrested (Last accessed on 10th June 2014)
[2] http://srilankabrief.blogspot.ch/2014/05/sri-lanka-security-forces-should.html#more (Last accessed on 10th June 2014)
[3] http://www.bbc.co.uk/sinhala/sri_lanka/2014/05/140527_gotabaya_court_video.shtml (Last accessed on 10th June 2014)

### 3. பாதுகாப்பு அமைச்சினால் ஊடகப் பயிற்சி செயலமர்வு இரத்து செய்யப்பட்டது

நல்லாட்சியை உறுதி செய்யுமுகமாக கற்று கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் ஆக்கப் பட்ட பரிந்துரைகளின் மீது புலனாய்வு அறிக்கைகள் எழுத ஊடகவியலாளர்களை ஊக்குவிப்பதற்கும் பயிற்சியளிப்பதட்குமாக திருன்ச்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா (Transparency International Sri Lanka (TISL) இனால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த செயலமர்வு ஒன்று பாதுகாப்பு அமைச்சினால் இரத்து செய்யப் பட்டது[4]. இதனையொத்த சிங்கள ஊடகவியலலர்களுக்கான செயலமர்வு ஒன்று ஏற்கனவே இடம் பெற்றிருந்ததுடன் தமிழ் மொழி ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு கிரிதலே தீர் பார்க் ஹோடேலில் மே மாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் மற்றும் கொழும்பை சேர்ந்த ஊடகவியலாளர்கள் பங்கேற்றனர். எவ்வாறாயினும் மாநாட்டின் இடையில் ஹோட்டல் நிர்வாகம், TISL இடம் பாதுகாப்பு அமைச்சினால் தமக்கு கிடைக்கப் பெற்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் இச்செயலமர்வு தொடர்ந்து இடம்பெற முடியாதென அறிவித்தது.

### 4. மே தினத்தன்று உடகவியலாளர் அமைச்சர் ஒருவரால் தள்ளப்பட்டார்

2014 மே 1 அன்று அமைச்சர் தொண்டமான் தலைமையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினப் பேரணியில் தனது கடமைகளை மேற்கொள்வதற்கு இதழியலாளர் ஒருவர் முயலுகையில் மந்திரிசபை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அவரைத் தள்ளினார். பதுளை மாவட்டத்தின் பண்டாரவளையில் கட்சியின் மே தினப் பேரணியிலும், கூட்டத்திலும் இதழியலாளர் செய்தி சேகரித்தார். “இவ்விதமாக அமைச்சர் ஒருவர் செயற்படும் போது, இந் நாட்டில் ஜனநாயகத்தினதும், ஊடகச் சுதந்திரத்தினதும் நிலை என்ன என்பது எமக்கு வெளிப்படையாகும்” என சம்பவம் பற்றி தமிழ் இதழியலாளர் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் திரு.எ.நிக்ஸன் தெரிவித்தார்.[5] இச் சம்பவம் சக இதழியலாளர்களினால் ‘வீடியோ’வில்[6] படமாக்கப்பட்டு, தொலைக்காட்சியில் பரந்த பிரச்சாரம் அளிக்கப்பட்டது. INFORMஇன் சிறந்த அறிவுக்கு எட்டியவரை ஒன்றில் அமைச்சரினால் பகிரங்க மன்னிப்பு கோரப்படவில்லை அல்லது அமைச்சருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### 5. இதழியலாளர் ஒருவர் மீது ஆட்கடத்தல் மற்றும் தாக்குதல் முயற்சி

கொடகாவெலவில் (இரத்தினபுரி மாவட்டம்) நியூஸ் 1இன் (MBC/MTV வலைப்பின்னல்) மாகாண நிருபர் திரு.மகிந்த புஷ்பகுமாரவைக் கடத்துவதற்கு ஒரு குழுவினர் முயற்சித்தனர். இரவில் உடவளவை தேசிய வனத்திலிருந்து யானைக் குட்டியொன்றைப் பிரிப்பது மீது அவர் அறிக்கையிடுவதற்கு முயற்சித்ததினால் இம் முயற்சி இடம்பெற்றது. குடியிருப்பாளர்களினாலும், வனவாழ்வு அலுவலர்களினாலும் திரு.புஷ்பகுமார காப்பாற்றப்பட்ட போதிலும், சம்பவம் பற்றிய பதிவைக் கொண்ட ‘கசெட்’ திருடப்பட்டதாக வலைப்பின்னல் அறிவித்திருந்தது. கொடகாவெல வைத்தியசாலையில் திரு.புஷ்பகுமார அனுமதிக்கப்பட்டதுடன், கொடகாவெல பொலிசுடனும், பொலிஸ் மா அதிபருடனும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.[7]

### 6. www.theindependent.lk என்ற இணையதளத்திற்குத் தடை

உள்நாட்டு இணையதள சேவையை வழங்கும் சகல நிறுவனங்களினாலும் தனது இணையதளம் 29 ஆம் திகதி மே மாதம் 2014 அன்று தடைசெய்யப்பட்டுள்ளதாக தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு (National Human Rights Commission of Sri Lanka - HRCSL) www.theindependent.lk என்ற இணையதளத்தின் ஆசிரியர் சுபாஷ் ஜயவர்தன முறைப்பாடொன்றைச் செய்துள்ளார். பேச்சுச் சுதந்திரம் தொடர்பில் அரசியலமைப்பின் 14(1) (அ)இனால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் மீறலொன்றே இணையதளத்தை தடை செய்தமையாகும் என திரு.ஜயவர்தன தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

---

[4] http://www.tisrilanka.org/?p=11979 (Last accessed on 1st July 2014)
[5] http://newsfirst.lk/english/2014/05/arumugam-thondaman-obstructed-journalist-media-organisations-condemn-behaviour/33439 (Last accessed on 10th June 2014)
[6] https://www.youtube.com/watch?v=pr-bNU1s7Iw#t=79 (Please see 1.12- 1.14) (Last accessed on 10th June 2014)
[7] http://newsfirst.lk/english/2014/05/newsfirst-correspondent-attempted-rescue-elephant-calf-attacked/33442

இலங்கையில் பயன்படுத்தப்படும் சகல மூன்று மொழிகளிலும் ( சிங்களம், ஆங்கிலம், மற்றும் தமிழ்) இணையதளம் நாளாந்தம் புதுப்பிக்கப்படுவதுடன், இது இன்டிபென்டன் மீடியா நெற்வேர்க்ஸ் (பிறைவேற்) லிமிற்றெற்றினால் (Independent Media Networks (Pvt) Ltd) நிருவகிக்கப்படும் ஒரு சுதந்திரமான ஊடக நிறுவனமாகும் என தனது முறைப்பாட்டில் ஆசிரியர் கோரியுள்ளார். 2013 மே 20 முதல் இணையதளம் தடை செய்யப்பட்டுள்ளது.[8]

7. **இணையதளத்திற்குத் தடை - www.srilankamirror.lk**

2014 மே 12இலிருந்து இலங்கையில் உள்ள இணையதள சேவையை வழங்கும் சகல நிறுவனங்களினாலும் www.srilankamirror.lk என்ற இணையதளத்திற்கான அடைதல் தடைசெய்யப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான மனுவொன்றில் அதன் ஆசிரியர் திரு.கலும் ஷிவாந்தா கோரியுள்ளார். இச் சட்டவிரோதமான நடவடிக்கைகளின் காரணமாக அரசியலமைப்புரீதியில் வழங்கப்பட்டுள்ள பேச்சுச் சுதந்திரமும், சட்டத்தின் முன் சமத்துவமும் தெளிவாக மீறப்பட்டுள்ளதனால், பிரச்சனை தொடர்பில் உடனடியான விசாரணையொன்றை மனு கோரியுள்ளது. இலங்கைத் தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் தடைசெய்யப்பட்டதாக உள்நாட்டு இணையதள சேவையை வழங்கும் நிறுவனங்கள் தம்மிடம் வாய்மொழியாக அறிவித்துள்ளதாக ஊடகங்களிடம் திரு.ஷிவாந்தா தெரிவித்தார்.[9]

2005இல் முதல் தடவையாக, இலங்கையில் www.tamilnet.com என்ற செய்தி இணையதளமொன்று தடைசெய்யப்பட்டது, அது முதல் டசின் கணக்கான செய்தி இணைய தளங்கள் ( சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் அத்துடன் ஆங்கிலம் உட்பட பல மொழிகளைக் கொண்டவை) இலங்கையில் தடைசெய்யப்பட்டன. இவற்றில் பெரும்பான்மையானவை அரசாங்கத்தை விமர்சிக்கும் செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிடும் இணையதளங்களாகும்.

இணையதளங்களை அரசாங்கம் தடைசெய்வது அரசியலமைப்புக்கு எதிரானது என ஊடகங்களுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.[10] ஆனால், INFORMஇன் சிறந்த அறிவுக்கு எட்டியவரை, மேற்படி முறைப்பாடுகள் செய்யப்படும் வரை, தனது சொந்தத்தில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கும், மீறப்படுகின்ற அடிப்படை உரிமை(கள்) பற்றி முறைமையான முடிவுகளை வழங்குவதற்கும் அத்துடன் பதிவுசெய்யப்பட்ட இணையதளங்களுக்கு அரசியலமைப்புக்கு எதிரான தேவைப்பாடுகள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், பெருமளவு ஆண்டுகளுக்கு முன்னரேயே இந் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது முதல் இது தொடர்பில் ஏதேனும் நிச்சயமானதும், உறுதியானதுமான நடவடிக்கையை தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு எடுக்கவில்லை.

இணையதளத்தின் சமூக ஊடகக் கணக்குகளில் ஒரு தொடரிலான 'சைபர்' (cyber) தாக்குதல்கள் முயற்சிக்கப்பட்டுள்ளதாக 2014 மே 24 அன்று ஸ்ரீ லங்கா மிரர் அறிக்கையிட்டிருந்தது. இது அதன் உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் மற்றும் ட்விட்டர் கணக்கு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.[11]

---

[8] https://www.srilankamirror.com/news/15185-theindependent-lk-complaints-to-hrc-over-blockade (Last accessed on 10th June 2014)
[9] http://www.theindependent.lk/index.php/news2/3577-a-petition-to-hrc-against-sl-web-blockade (Last accessed on 10th June 2014)
[10] http://www.theindependent.lk/index.php/news2/3617-blocking-websites-is-a-violation-of-the-constitution-hrc-chairman (Last accessed on 10th June 2014)
[11] https://www.srilankamirror.com/news/15118-cyber-attack-attempts-on-mirror-emails-social-media-accounts (Last accessed on 10th June 2014)




NHRC-SLக்கு மனுவைச் சமர்ப்பித்த பின்னர் புகைப்படமொன்றுக்கு இதழியலாளர்களும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் முகங்கொடுக்கின்றனர் (புகைப்படம்: ஸ்ரீலங்கா மிரர்)

**8. திரைப்பட நடிகரான எதிர்க்கட்சி அரசியல்வாதியின் 'கட் அவுட்' பொலிசாரினால் கீழிறக்கப்பட்டது**

2013 மே 28 அன்று 'ரஞ்ஜா' என்ற திரைப்படம் வெளியிடப்படுவதையிட்டு அறிவிப்பதற்காக பொரளையில் (கொழும்பு மாவட்டம்) ரிட்ஸ் திரையரங்குக்கு முன்பாக நிறுவப்பட்டிருந்த பாரிய 'கட் அவுட்'களை பொலிசார் அகற்றினர். இத் தி;ரைப்படத்தில் பிரதான பாகத்தில் இரத்தினபுரி மாவட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நடிக்கின்றார். 'ரத்துபஸ்வல ரஞ்ஜாவையும், அராஜகத்தின் மன்னர்களையும் வெளிப்படுத்து' என்ற வார்த்தைகளுடன், சண்டையிடும் ஒருவராக திரு.ராமநாயக்கவை 'கட் அவுட்'கள் காட்டின. 'கட் அவுட்'கள் அகற்றப்பட்டமைக்கு எதிராக திரைப்பட அரங்கின் முகாமையாளரினால் செய்யப்பட்ட முறைப்பாடொன்றைப் பதிவுசெய்வதற்கு பொரளைப் பொலிசார் மறுத்துவிட்டனர்.[12] 2013 ஓகஸ்டில் மூன்று பேர் சுட்டுக்கொல்லப்படுவதற்கும், பெருமளவானோர் காயமடைவதற்கும் இட்டுச்சென்ற மாசடைந்த நீருக்கு எதிரான போராட்டங்கள் இடம்பெற்ற கிராமமே ரத்துபஸ்வல ஆகும். 2014 முற்பகுதியில் பிரசித்தமான வாக்கின் மூலம் ஏழாவது தொடர்ச்சியான ஆண்டாக மிகவும் பிரசித்தமான நடிகராக திரு.ராமநாயக்க தெரிவுசெய்யப்பட்டிருந்தார். 'கட் அவுட்டை' அவர்கள் வைக்க வேண்டுமானால் 'அநீதியின் அரியணையையும், சட்டவிரோதமான அரசர்களையும் வெளிப்படுத்துகின்றது' என்ற சொற்களை அழிக்குமாறு பொலிசார் விரும்பியதாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன.[13]

[12] https://www.srilankamirror.com/news/14943-police-remove-ranja-s-cutouts (Last accessed on 10th June 2014)
[13] http://lankaenews.com/English/news.php?id=14217 (Last accessed on 10th June 2014)

### 9. இலங்கையின் அமைச்சர் ஒருவரினால் உலக இளைஞர் மகாநாட்டில் பேராளர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பத்திரிகை மகாநாட்டுக்குத் தடை

நைஜீரியாவில் *பெக்கோ ஹராம்* (*Boko Haram*) தீவிரவாதிகளினால் அண்ணளவாக 300 பாடசாலைச் சிறுமிகள் கடத்தப்பட்டமை குறித்து உலக இளைஞர் மகாநாட்டுக்கான பேராளர்களினால் நடத்தப்படவிருந்த பத்திரிகை மகாநாடொன்றை இலங்கையின் இளைஞர் விவகார அமைச்சர் தடைசெய்ததாக அறிக்கையிடப்படுகின்றது. இலங்கை, கொழும்பில் 2014 மே 6 முதல் 10 வரை இளைஞர் மகாநாடு நடைபெற்றது.[14] "இந்த மனிதர்கள் மனதில் வித்தியாசமானதொரு நிகழ்ச்சிநிரலைக் கொண்டுள்ளார்கள்;. இது மகாநாட்டுடன் தொடர்பானதல்ல. எனவே, பத்திரிகை மகாநாடொன்றை நடத்துவதற்கு நாம் அவர்களை அனுமதிக்க வேண்டும் என நான் நினைக்கவில்லை" என ஊடகங்களுக்கு அமைச்சர் கூறியதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. "இது எமது நிகழ்ச்சியாகும். எமது நிலையை உலகம் அறிய வேண்டும். இந்த பாரதூரமான அநீதியை உலகத்திற்கு இளைஞர்கள் பரப்ப வேண்டும். என விரும்புகின்றன" என இளைஞர் பேராளர்கள் கூறினார்கள். அமைச்சரின் நடவடிக்கைகளுக்கு எதிராக பேராளர்களின் குழுவொன்று எதிர்ப்பொன்றைத் தெரிவித்து 'எமது சிறுமிகளை மீளக்கொண்டு வாருங்கள்' என்ற வாக்கியங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்திப்பிடித்தனர்.




பத்திரிகை மகாநாடொன்றை நடத்துவதற்கு மறுத்தமைக்கு எதிராக கொழும்பில் 2014 உலக இளைஞர் மகாநாட்டில் சர்வதேச பேராளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். 9 மே 2014 (புகைப்பட அனுசரணை: சங்கா விதானகம)

### 10. அ.சா.தாபனத்திற்கு அரசாங்கக் கட்டுப்பாட்டிலான செய்திப்பத்திரிகையான டெயிலி நியூஸினால் பதிலளிப்பதற்கான உரிமை மறுப்பு

அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேராவுக்கு எதிராக தனிப்பட்ட பழிதீர்க்கும் எண்ணத்தை வெளிப்படுத்திய பின்னர் அரசாங்கக் கட்டுப்பாட்டிலான செய்திப்பத்திரிகை பதிலளிப்பதற்கான உரிமையை நன்கு அறியப்பட்ட கொழும்பைத் தளமாகக் கொண்ட அ.சா.தாபனமான தேசிய சமாதானப்

[14] http://www.ceylontoday.lk/51-63517-news-detail-african-delegates-protest-at-bmich.html (Last accessed on 10th June 2014)

பேரவைக்கு ( தே.ச.பே.) மறுத்துரைத்ததாக தே.ச.பே. தெரிவித்திருந்தது. 'செய்திப் பத்திரிகையொன்றில் ஆசிரியர் தலையங்கத்திலும், பிரதான விவரணச்சித்திரக் கட்டுரையிலும் விமர்சிக்கப்பட்டவர்களுக்கு பதிலளிப்பதற்கான உரிமையை வழங்காதிருப்பது ஊடக நீதிநெறியின் மீறலொன்றாகும்' என தே.ச.பே. தெரிவித்திருந்தது.[15] யுத்த வெற்றித் தினமொன்றுக்குப் பதிலாக தேசிய நினைவு தினமொன்றைப் பரிந்துரைத்து தே.ச.பேரவையினால் வழங்கப்பட்ட அறிக்கையொன்றே தனிப்பட்ட பழிதீர்க்கும் எண்ணத்தின் சந்தர்ப்பமாகும். தே.ச.பேரவையையும், கலாநிதி ஜெஹான் பெரேராவையும் தாக்கி ஆசிரியர் தலையங்கமொன்றை 'டெயிலி நியூஸின்' ஆசிரியர் எழுதியதுடன், விவரணச்சித்திரக் கட்டுரையொன்றையும் வெளியிட்டிருந்தார்.

## இ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல்

### 11. பல்கலைக்கழகமொன்றில் மே தினம் தொடர்பான கருத்தரங்கில் பேச்சாளருக்குத் தடை

2014 மே 5ஆம் திகதிக்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த மே தினம் பற்றிய கருத்தரங்கொன்றுக்கு அனுமதியை வழங்க ரஜரட்டைப் பல்கலைக்கழகம் (அனுராதபுரம் மாவட்டத்தில்) மறுத்தது. இந் நிகழ்வில் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் ஒன்றியத்தின் (Inter University Student Federation - IUSF) குழுத் தலைவர் உரையாற்றவிருந்தார் என்ற உண்மையை பல்கலைக்கழகம் காரணமாகக் காட்டியது. இதனால் பல்கலைக்கழகத்திற்கு வெளியே கருத்தரங்கு நடத்தப்பட வேண்டியிருந்தது.

### 12. பல்கலைக்கழக மாணவர்களினால் எதிர்ப்புப் பேரணிக்கு எதிராக நீதிமன்றக் கட்டளையைப் பொலிசார் பெற்றனர்

2014 மே 7 அன்று, நடைபெறவிருந்த எதிர்ப்புப் பேரணியொன்றைத் தடை செய்து, பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் ஒன்றியத்தின் 17 செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நீதிமன்றக் கட்டளைகளை 2014 மே 6 அன்று பொலிசார் பெற்றுக்கொண்டனர். இவை மே 6 அன்று இரவு மாணவர்களின் வீடுகளுக்கு கையளிக்கப்பட்டன. இக் காலத்தின் போது அரசாங்கத்தினால் கொழும்பில் விருந்தோம்பப்படவிருந்த உலக இளைஞர் மகாநாடே காரணமாகும். மாணவ செயற்பாட்டாளர்களின் வீடுகளுக்கு பல தடவைகள் வருகைதருவதன் மூலம் அவர்களைப் பொலிசார் அச்சுறுத்தினர். சில மாணவர்களின் வீடுகளுக்கு பொலிசார் ஆறு தடவைகள் என்றவாறு சென்றுள்ளனர். 17 மாணவர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், IUSF குழுத் தலைவரை கைது செய்வதற்காக பிடிவிறாந்தொன்றுடன் பொலிசார் அவரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

### 13. பொலிசாரினால் மாணவ எதிர்ப்பாளர்கள் கைதுசெய்யப்பட்டு, தாக்கப்பட்டனர்

2014 மே 16 அன்று 17 பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு, பலரும் தாக்கப்பட்டனர். காயங்களின் காரணமாக நான்கு மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், காயமடைந்த மேலும் இரு மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை. இந்தக் கோரலை பொலிசார் மறுத்துரைத்தனர்.[16]

'சிவில் உடையில் வந்தவர்களினால் அவர்கள் ( மாணவர்கள்) பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு மக்களின் முன்பாக தாக்கப்பட்டனர். கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் அவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட போது இரத்தம் தொடர்ந்துமே வெளியேறியது' என மாணவர் ஒன்றியப் பேச்சாளரான லாஹிரு மதுசங்க ஊடகங்களுக்கு தெரிவித்தார்.[17] நான்கு வருடத்திலான இணைந்த சுகாதார விஞ்ஞான விசேட பட்டத்தை மூன்று வருட பொதுப் பட்டமொன்றாக குறைப்பதற்கு எதிராக

---

[15] http://srilankabrief.blogspot.ch/2014/05/sri-lanka-govt-flagship-english-daily.html#more (Last accessed on 10th June 2014)
[16] http://www.sundaytimes.lk/140518/news/ahs-undergraduate-activists-assaulted-in-police-custody-and-hospitalised-99597.html (Last accessed on 10th June 2014)
[17] http://www.sundaytimes.lk/140518/news/ahs-undergraduate-activists-assaulted-in-police-custody-and-hospitalised-99597.html (Last accessed on 10th June 2014)

நடைமுறையிலான போராட்டமொன்றில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர். பட்டத்தின் தரத்தைக் குறைப்பதையிட்டு உயர் கல்வி அமைச்சையும், பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவையும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் மாணவர் ஒன்றியம் (Allied Health Sciences Student Union - AHSSU) குற்றம்சாட்டுகின்றது.[18]



சித்திரவதை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவர் (புகைப்படம்: லங்கா ட்ருக்)

'இணைந்த சுகாதார விஞ்ஞானப் பயிற்சிநெறியின் தரத்தினதும், பயிற்சிநெறியின் காலத்தின் குறைப்பினதும் பிரச்சனை தொடர்பில் மாணவர்களின் கோரிக்கைகளும், கரிசனைகளும் நியாயமானவை. மூன்று மாதங்களைக் கொண்ட காலத்திற்கு மேலாக அவர்கள் சம்பந்தப்பட்டவர்களை அணுகிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுக்கு பதில் கிட்டவில்லை' என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளத்தின் (Federation of University Teachers Associations - FUTA) தலைவர் திரு.சந்திரகுப்த தேனுவர தெரிவித்தார்.[19]

### 14. மே தின பேரணிக்கு தொழிற்சங்க கூட்டணிக்கான இடம் பறிப்பு

முன்னைய வருடங்களைப் போன்று 2014 மே 1 அன்று அவர்களது மே தினக்கூட்டத்தை நடத்துவதற்கு கொழும்பு நகரத்தில் உள்ள ஹைட்பார்க் மைதானம் ஒதுக்கப்படும் என இணைந்த தொழிற்சங்க கூட்டணிக்கு (Joint Trade Union Alliance) பொலிசார் வாய்மொழியாக வாக்குறுதியளித்ததாக INFORMக்கு தொழிற்சங்கத் தலைவர்கள் கூறினார்கள். ஆனால், அவர்களது கூற்றுப்படி பொலிசார் பின்னர் அவ்விடத்தை அரசாங்கச் சார்பு தொழிற்சங்கமொன்றுக்கு ஒதுக்கியதுடன், அவ்விடத்தில் மே தினக் கூட்டத்தை நடத்துவதிலிருந்து இணைந்த தொழிற்சங்கம் கூட்டணியைத் தடைசெய்து, நீதிமன்றக் கட்டளையொன்றை பெற்றுக்கொண்டனர். மே 1 அன்று அவர்களது பேரணியை பொலிசார் தடைசெய்ததுடன், பிரச்சனைக்குரிய ஹைட் பார்க் மைதானத்திலிருந்து பெருமளவு கிலோ மீட்டர்களுக்கு அப்பால், கொம்பனித்தெரு சந்தியில் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். அத்துடன் பின்னர் ஹைட் பார்க் மைதானத்தில் மே தினக் கூட்டத்தை நடத்தக்கூடாது என்ற நீதிமன்ற கட்டளையை மீறியதாக மூன்று தொழிற்சங்கத் தலைவர்கள் மீது குற்றஞ்சுமத்தினர். இது சில இணையதளங்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது.[20]

---

[18] http://www.nation.lk/edition/news-online/item/20986-ahs-students-fight-for-four-year-degree.html#sthash.yEL8BHg8.dpuf (Last accessed on 10th June 2014)
[19] http://www.lankanewspapers.com/news/2014/5/87995.html (Last accessed on 10th June 2014)
[20] http://www.srilankannursing.net/May%20day%202014.html ((Last accessed on 10th June 2014)) – in Sinhalese




கொம்பனித்தெரு சந்தியில் இணைந்த தொழிற்சங்க கூட்டணியின் மே தின போராட்டத்தை பொலிஸ் தடைசெய்தது (புகைப்படம்: தாதி கராப்பிட்டிய முகநூல்)

### 15. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஹொல்சிம் ஊழியர்கள் தாக்கப்பட்டனர்

தமது சேவையை நிரந்தரமாக்கும்படி கோரி, தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஹொல்சிம் ஊழியர்கள் காலி (தென் மாகாணம்) தொழிற்சாலைக்கு முன்பாக 2014 மே 24 அன்று காடையர்களினால் தாக்கப்பட்டனர். இத் தாக்குதலின் விளைவொன்றாக, ஓர் ஊழியர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கம்பெனிகளுக்கிடையிலான ஊழியர் சங்கத்தின் (Inter Company Employees' Union) சிரேஷ்;ட உப தலைவர் தோழர் சோமதாச வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.[21]

தாம் 15 வருடங்களாக வேலை செய்துள்ள போதிலும், தாம் நிரந்தர ஊழியர்களாக்கப்படவில்லை என்ற காரணத்தினால் தொழிற்சங்க நடவடிக்கையை அரவாகருவ (புத்தளம் மாவட்டம்) மற்றும் காலி மாவட்டம் ஆகியவற்றிலிருந்து சுமார் 500 ஹொல்சிம் ஊழியர்கள் ஆரம்பித்துள்ளனர். ஒப்பந்த அடிப்படையொன்றில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு 8 மணித்தியால வேலையும், மாறும் முறையும், நிச்சயமான சம்பளமொன்றும் அத்துடன் மேலதிக நேர வேலைப் படிகளும் மறுக்கப்பட்டுள்ளதாகவும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும்/ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் அவர்களது உதவித்தொகைகளை வழங்குவதில் ஊழல் உள்ளதாகவும் தொழிற்சங்கம் கூறுகின்றது.

---

[21] http://www.unions.lk/site/index.php?option=com_content&view=article&id=247:thug-attack-on-holcim-employees&catid=88:news&Itemid=1166 (Last accessed on 10th June 2014)

## ஈ. எதிர் அரசியல் கட்சிகளை அடக்குதல்

### 16. தேசத்துரோகத்தின் செயலொன்று என த.வி. கூட்டமைப்பை அமைச்சர் குற்றஞ்சாட்டுகிறார்

அரசாங்கக் கட்டுப்பாட்டிலானதும், அரசாங்கத்திற்கு சொந்தமான அரசாங்கச் சார்பிலானதுமான ஆங்கில நாளாந்த செய்திப்பத்திரிகையான 'டெயிலி நியூஸின்' கட்டுரையொன்றைப் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளம் மீளவெளியிட்டிருந்தது. இது அர்ப்பணிக்கப்பட்ட தேசத்துரோகத்தை பாரிய தமிழ் அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு இழைத்துள்ளதாக குற்றஞ்சாட்டியிருந்தது. 'புலம்பெயர்ந்த தமிழர்களுடன் இணைப்புக்களைக் கொண்டுள்ள வெளிநாட்டுப் பயங்கரவாத தாபனங்களினதும், தனிப்பட்டவர்களினதும் மீது இலங்கையினால் சுமத்தப்பட்டுள்ள தடையை மீளப்பெறுமாறு கோரி வட மாகாண சபையில் பெருமளவு தீர்மானங்களை நிறைவேற்றியும், ஏற்றுக்கொண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் அரசியலமைப்பின் கீழ் முழு அளவிலான தேசத்துரோகத்தின் செயற்பாடொன்றை இழைத்துள்ளனர்' என அரசாங்க நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனிவிரத்ன தெரிவித்துள்ளதாக சொல்லப்பட்ட கட்டுரை குறிப்பிட்டிருந்தது.[22]

### 17. யாழ்ப்பாணம் மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவரின் வீடு தாக்கப்பட்டது

2014 மே 30 அன்று, யாழ்ப்பாணம் மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு.ராஜதேவனின் வீடு அடையாளம் தெரியாத குழுவொன்றினால் தாக்கப்பட்டது. தாக்குதல் நடத்தியோர் மோட்டார் சைக்கிள்களில் வந்து, முன் ஜன்னலுக்கு கற்களை எறிந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்காலில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது கொல்லப்பட்ட மக்களுக்கு காணிக்கை செலுத்துவதற்கு முன்மொழிந்ததில் திரு.ராஜதேவனின் சம்பந்தமே தாக்குதலுக்கான காரணம் என தமிழ் ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன.[23]

### 18. த.வி.கூ. அமைப்பாளரின் வீடு இராணுவத்தினரால் சுற்றிவளைப்பு

2014 மே 28 அன்று காலை 4 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள திருநகரில் உள்ள வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.பசுபதிப்பிள்ளையின் வீட்டை இராணுவத்தினர் சுற்றிவளைத்திருந்ததுடன், குடும்ப ஆவணங்களையும் பரிசோதித்தனர்.[24]

## உ. தமிழ் மக்களினாலான நினைவுகூரலில் அடக்குமுறை

### 19. வழிபாட்டுத் தலங்களுக்கு எச்சரிக்கை; பொதுமக்களின் நினைவுகூரலுக்குத் தடை

வழிபாட்டுக்காக தேவாலயங்களுக்கு உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் செல்லும் நாளொன்றான மே 18ஆம் திகதி ஒரு ஞாயிற்றுக்கிழமை என்ற போதிலும், தேவாலயத்திற்குச் செல்வதற்கு இராணுவத்தினால் தாம் அனுமதிக்கப்படவில்லை என INFORMக்கு மதகுருமார் உட்பட சில ஆட்கள் குறிப்பிட்டனர். இறந்தவர்களை நினைவுகூருவதற்கு சகல ஆலய நிகழ்ச்சிகளையும், பொதுசன ஒன்றுகூடல்களையும் மே மாதத்தின் மூன்றாம் வாரத்தின் போது இராணுவம் தடைசெய்ததுடன், 2014 மே 17ஆம், 18ஆம் திகதிகளில் மணிகள் அடிக்கக்கூடாது எனவும் தெரிவித்திருந்தனர்.[25] 2014 மே 18 அன்று, பொதுசன நினைவுகூரல் நிகழ்ச்சிகள் அனுமதிக்கப்படமாட்டா, ஆனால், தமது வீடுகளில் தனிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு மக்கள் அனுமதிக்கப்படுவார்கள் என ஊடகங்களுக்கு இராணுவப் பேச்சாளர்

---

[22] http://www.defence.lk/new.asp?fname=TNA_Says_UN_BAN_BAN_20140430_01 (Last accessed on 10th June 2014)

[23] http://www.tamilcnn.ca/house-rajadevan-attacked-inviting-mullivaikkaal-remembrance-day.html (Last accessed on 10th June 2014)

[24] http://www.lankasrinews.com/view.php?22AOlv2acJ5YAe4e4eMMc02aAmB3dd3PBmc30366AY2e4UY550ca 2lOId3 (Last accessed 5th June 2014)

[25] http://www.globaltamilnews.net/GTMNEditorial/tabid/71/articleType/ArticleView/articleId/107107/language/en-US/article.aspx (Last accessed on 10th June 2014)

ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.[26] பின்னர், இது தேசிய ஒற்றுமைக்கு ஒரு பயமுறுத்தலாகும் என்ற காரணத்தினால் நினைவுகூரல் நிகழ்ச்சிகள் தடுக்கப்பட்டதாக இலங்கைப் பொலிசார் தெரிவித்தனர்.[27]

**20. சமய நிகழ்ச்சிகள் தடை செய்யப்பட்டதுடன் குழுப்பப்பட்டன; தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் தடுக்கப்பட்டனர்**

யுத்தத்தில் கொல்லப்பட்ட தனது உறவினர்களையும், தனது கணவரையும் நினைவுகூருவதற்காக தனது வழமையான சடங்குகளை நடத்துவதற்காக கீரிமலையில் உள்ள இந்து ஆலயத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைபைச் சேர்ந்த வட மாகாண சபை உறுப்பினரும், 2009 மே 18 அன்று இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் போயுள்ள தமிழ் புலி பிரிவினைவாதிகளில் ஒருவராக விளங்கும் புரட்சித் தலைவர் ஒருவரின் மனைவியுமான திருமதி அனந்தி சசிதரன் சென்ற போது, 'இழிவுபடுத்தும் மொழியை' இராணுவத்தினர் பயன்படுத்தியதாக அவர் கூறினார்.[28] மரணமடைந்த தமது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கான சமயச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காக கூடியிருந்த தமிழ் கருத்துக் கணிப்பாளர்களுடனும், மக்களுடனும் இராணுவத்தினர் இரண்டறக்கலந்திருந்ததாக அறிக்கையிடப்படுகின்றது.[29]



தனது காணாமல் போன கணவருக்காக சமயச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காக தன்னை இராணுவம் தடுத்ததிற்கு எதிராக போராட்டமொன்றை வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் நிகழ்த்தினார் (புகைப்படம்: தமிழ் கார்டியன்)

பெருமளவு தமிழ் ‘ஒன்லைன்’ ஊடகங்களினால் மேலேற்றப்பட்ட ‘வீடியோ’ காட்சிகளினால் காட்டப்பட்டவாறு, கோஷ;டியொன்றினால் தமிழ் அரசியல்வாதிகள் வசைபாடப்பட்டதுடன், சமயச் சடங்குகளுக்கு பயன்படுத்தபப்டும் தேங்காய்கள் பலாத்காரமாக மிதிக்கப்பட்டன. ஆலயங்களின் முன்றலில் தேங்காய்களை அடித்து சிதறவைப்பது சைவ பக்தர்களின் உணர்வுப்பூர்வமான வெளிப்பாடொன்றாகும்.[30] வவுனியாவில் நினைவஞ்சலிக் கூட்டமொன்றை நடத்துவதற்காக கூட்டுறவு மண்டபத்தை த.வி.கூ.

---

26 http://www.sundaytimes.lk/140518/news/memorials-blood-donation-banned-in-north-east-99572.html (Last accessed on 10th June 2014)

27 http://www.adaderana.lk/news/war-remembrance-service-a-threat-to-harmony-police- (Last accessed on 10th June 2014)

28 http://www.reuters.com/article/2014/05/18/us-sri-lanka-war-celebrations-idUSBREA4H09B20140518 (Last accessed on 10th June 2014)

29 https://www.youtube.com/watch?v=x0iqbamHavc (Last accessed on 10th June 2014)

30 https://www.youtube.com/watch?v=6-WVmXDidOU (Last accessed on 10th June 2014)

பாராளுமன்ற உறுப்பினர்கள் முற்பதிவுசெய்திருந்தனர். ஆனால், பொலிசாரின் அறிவுறுத்தல்களின் பேரில் முற்பதிவு இரத்துச் செய்யப்பட்டது.[31]

21. **மாகாண சபை செயலகம் அடைக்கப்பட்டது; மலர்ச்சென்டுகள் மிதிக்கப்பட்டன**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கைதடியில் வட மாகாண சபைச் செயலகத்தின் முன்றலில் வைக்கப்பட்டிருந்த இறந்தவர்களை நினைவுகூருவதற்கான மலர்ச்சென்டுகளை பொலிஸ் அலுவலர்கள் மிதித்தனர். 'ஒன்லைன்' செய்தி ஊடகங்களினால் மேலேற்றப்பட்ட குறுகிய 'வீடியோ' காட்சியில் காட்டப்பட்டுள்ளவாறு, தமிழ் அரசியல் தலைவர்களினால் ஏற்றப்பட்டிருந்த கற்பூரத் தட்டுக்களை பொலிஸ் அலுவலர்கள் நொறுக்குகின்றார்கள். நினைவுகூரல் நிகழ்ச்சியொன்றை நடத்துவதற்கு பிரவேசிக்கும் அரசியல்வாதிகளைத் தடுப்பதற்காக வட மாகாண சபைக் கட்டிடத்தைச் சுற்றி பொலிசார் பாதுகாப்பு வேலி போட்டிருந்தனர்.[32]

22. **இராணுவத்தினால் செய்திப்பத்திரிகை மற்றும் அரசியல் கட்சி அலுவலகங்கள் அடைக்கப்பட்டிருந்தன**

யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் முன்னணிவாய்ந்த தமிழ் தினசரியான 'உதயன்' அலுவலகம் இராணுவத்தினால் சுற்றிவளைக்கப்பட்டு, நாவலர் வீதியிலிருந்தும், கஸ்தூரியார் வீதியிலிருந்தும் அலுவலகத்திற்கு இட்டுச்செல்லும் இரு புகுவழிகளும் அடைக்கப்பட்டிருந்தன. வீதிகளில் பிரவேசித்த சகலரும விசாரிக்கப்பட்டதுடன், சிலர் திரும்பிச் செல்லுமாறு கேட்கப்பட்டனர்.[33] யாழ்ப்பாணத்தில் உள்ள இன்னொரு தமிழ் தினசரியான 'யாழ் தினக்குரல்' அலுவலகமும் இராணுவத்தினால் அடைக்கப்பட்டிருந்தது.[34] 2014 மே 18 காலையில், தமிழ் தேசிய மக்கள் முன்னணி[35] மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் அலுவலகங்கள் பெரும் ஆயுதபாணிகளான படைவீரர்களால் அடைக்கப்பட்டிருந்தன.[36] கிளிநொச்சியில் இராணுவத்தினரால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அலுவலகம் சுற்றி வளைக்கப்பட்டதுடன், நினைவுகூரல் நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றச்சென்ற மக்களை அவர்கள் தடுத்துநிறுத்தினர். இறந்தவர்களை நினைவுகூருவதில் சமயச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காக கிருஷ்ணன் இந்து ஆலயத்தில் மக்கள் ஒன்றுகூடியிருந்தனர்.[37]

23. **இரத்த தானங்களுக்குத் தடை; யாழ்ப்பாணம் வைத்தியசாலை இரத்த வங்கி மூடப்பட்டது**

2014 மே 18 அன்று இரத்த தான இயக்கங்கள் கூட தடைசெய்யப்பட்டன. இத்தகைய இயக்கங்களில் உதவியளிக்க வேண்டாமென யாழ்ப்பாணம் மற்றும் வடக்கில் உள்ள வேறு வைத்தியசாலைகளுக்கு பொலிசார் அறிவுறுத்தியிருந்தனர். 2014 மே 18 அன்று மக்கள் இரத்தத்தை தானமாக வழங்குதைத் தடுப்பதற்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் உள்ள இரத்த தான நிலையத்தை மூடிவிட்டதாகக் கூறப்படுகின்றது.[38]

---

31 http://www.sundaytimes.lk/140518/news/memorials-blood-donation-banned-in-north-east-99572.html (Last accessed on 10th June 2014)
32 http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37215 (Last accessed on 10th June 2014)
33 http://www.dailymirror.lk/news/47226-roads-blocked-in-jaffna.html (Last accessed on 10th June 2014)
34 http://www.globaltamilnews.net/GTMNEditorial/tabid/71/articleType/ArticleView/articleId/107107/language/en-US/article.aspx (Last accessed on 10th June 2014)
35 http://www.tamilguardian.com/article.asp?articleid=10940 (Last accessed on 10th June 2014)
36 http://www.tamilguardian.com/article.asp?articleid=10942 (Last accessed on 10th June 2014)
37 http://www.globaltamilnews.net/GTMNEditorial/tabid/71/articleType/ArticleView/articleId/107076/language/si-LK/article.aspx (Last accessed on 10th June 2014)
38 http://www.tamilguardian.com/article.asp?articleid=10945 (Last accessed on 10th June 2014)

### 24. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மூடப்பட்டது

2014 மே 5 அன்று, விளக்கமின்றி மே 16இலிருந்து 20 வரை பல்கலைக்கழகம் மூடுவதை அறிவித்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கடிதங்களை அனுப்பினார்.[39] ஆனால், நேர முன்னேற்றபாடும், யுத்தத்தின் போது கொல்லப்பட்டவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்துவதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுங்கு செய்கின்றனர் என்ற உண்மையும் இத்தகையை நினைவஞ்சலி வைபவங்கள் ஒழுங்கு செய்யப்படுவதைத் தடுப்பதற்கு இவ்வாறு மூடப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டியது.

### 25. யாழ்ப்பாணத்திற்கு தமிழ் நூற்கல்வியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் இதழியலாளர்களுக்கும் கொலை மிரட்டல்கள்

யுத்தத்தில் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான அவர்களது முயற்சிகளுக்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் ஆசிரியர்களின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கும், மாணவர் தலைவர்களுக்கும் மற்றும் இதழியலாளர்களுக்கும் எதிராக வெளிப்படையான கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன.[40] மே 18 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளவில் 'இறுதி எச்சரிக்கை' என்ற தலைப்பிலான சுவரொட்டிகள் 'தேசம் காக்கும் படையினால் ' ஒட்டப்பட்டிருந்தன . இச் சுவரொட்டிகளில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர் தலைவர்கள் மற்றும் செய்திப்பத்திரிகை இதழியலாளர்கள் ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.[41]

2014 மே 7 அன்று பேராசிரியர்களும், மாணவர் தலைவர்களும் பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கிறார்கள் எனக் குற்றஞ்சாட்டி, அவர்களுக்கு எதிராக கொலை மிரட்டல்களை விடுத்து பல்கலைக்கழக வளவில் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. பல்கலைக்கழகத்தில் மே 18 அன்று அனுஷ்டானங்கள் அனுமதிக்கப்பட மாட்டா என உப வேந்தர், பீடாதிபதிகள் மற்றும் மாணவர் தலைவர்கள் ஆகியோர் உட்பட பல்கலைக்கழக அலுவலர்களுக்கு மேஜர் ஜெனரல் உதய பெரேரா 2014 மே 8 அன்று கூறினார்.


இறுதி எச்சரிக்கை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமத்தில் பயங்கரவாத்தை வளர்க்க முற்படுவோர் தண்டிக்கப்படவுள்ளனர்

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அவ் பயங்கரவாத்தை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினூடாக வளர்ப்பதற்கு முயற்சி செய்து வருகின்றனர்

இவ்வாறு முயற்சி செய்யும் தேச விரோத சக்திகளை நாம் இனங்கண்டு உள்ளோம்

இவர்களில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் கள் பீடாதிபதுகள் மாணவர்கள் ஆகியோர் இனங்கானப்பட்டுள்ளதோடு இவர்களோடு சேர்ந்து ஒருசில பேப்பர் காரர்பளும் செயற்பட்டு வருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளது

இவர்களிற்கு பலமுறை எச்சரிக்கை கூறியிருந்தும் அவர்கள் திருந்துவதாக இல்லை தொடர்ந்தும் மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் சேர்ந்து பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்

இது இவர்களிற்கான இறுதி எச்சரிக்கையாகும்

பீடாதுபதி சிவநாதன்
ஆசிரிய சங்க தலைவர் ராசகுமாரன் மானவர் ஒன்றிய தலைவர்
கிருபா கோமேஸ் பேப்பர்கார்ர்களான சாளின் நிரோஜன்
ஆகியோர் உள்பட பலர் இனங்காண பட்டுள்ளனர்

இவர்கள் இனியும் திருந்தா விட்டால் இருதி தீர்பபு மரண தண்டனையே சிலருக்கு இறுதி நாளும் குறிக்கப்பட்டுவிட்டது

கடந்த எச்சரிக்கைகளை போல் இதனையும் சாதாரணமாக கருதி விட வேண்டாம்

உங்களுக்கு இவ்வுலகில் இருந்து விடுதலை நிச்சயம்

தேசம் காக்கும் படை

'தேசம் காக்கும் படையினால்' 'இறுதி எச்சரிக்கை' (தமிழ் கார்டியன்)

---

39 http://srilankabrief.blogspot.ch/2014/05/why-should-tamils-speaking-of-war-be.html (Last accessed on 10th June 2014)
40 http://www.tamilguardian.com/article.asp?articleid=10974 (Last accessed on 10th June 2014)
41 http://www.lankasrinews.com/view.php?224YY5n2202SmBBd4eeoOOldcca0C6AAedddAeMMeaacallOU3e44ZBmm3003c55YO23 (Last accessed on 10th June 2014)

எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனைப் பாராட்டுவதாகவும், பயங்கரவாதத்திற்கான தூண்டுதலாகவும் ஏதேனும் அனுஷ்டானங்கள் கருதப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.[42]

பல்கலைக்கழகத்தில் பயமுறுத்தும் அறிவித்தல்கள் எல்.ரி.ரி.ஈ.க்கு புத்துயிரளிப்பதற்கு முயல்வதாக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவநாதனை மீண்டும் புறம்பாக்கியிருந்தன. கணனிப் பிரயோக உதவியாளர்களாக அண்மைய ஆட்சேர்ப்புக்கு, சபையை உண்மையாகவே நிருவகிக்கும் அரசியல் கட்சியொன்றின் உத்தரவின் பேரில் தகைமையற்ற ஆட்களின் பட்டியலொன்றிலிருந்து ஆட்கள் எடுக்கப்பட்டுள்ளனர் என, அவர் ஏற்கனவே செய்தது போன்று, பீடாதிபதியே எதிர்ப்பதற்கு சபையின் ஒரேயொரு உறுப்பினராக அறிக்கையிடப்பட்டுள்ளது. இது ஒரு 'தப்பான' நடைமுறை| என அவர் சபையைக் கண்டித்தார்.[43]

### 26. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் விசாரிக்கப்பட்டார்

2014 மே 20 அன்று நினைவுகூரல் வைபவமொன்றை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தினர். நினைவுகூரல் நிகழ்ச்சியை ஒழுங்குசெய்வதில் அவரது சம்பந்தத்திற்காக TIDஇனால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கலாநிதி எ. ராசகுமாரன் விசாரிக்கப்பட்டார்.[44]

### 27. வருடாந்த நினைவு கூறல் சடங்கு குறித்து கத்தோலிக்க மதகுருமார் இராணுவத்தால் விசாரணை

கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் தேவாலயத்தின் பங்கு மதகுருவாக ஊழியம் செய்யும் ஒரு கத்தோலிக்க மதகுரு யுத்தத்தின் கடைசி நாளன்று மரணமடைந்த முன்னாள் பங்கு மதகுருவுக்கும், யுத்தத்தின் போது மரணமடைந்த ஏனைய மக்களுக்கும் தேவாலயத்தில் நடைபெற்ற வருடாந்த நினைவுகூரலொன்றுக்கு இரு நாட்களுக்கு முன் இராணுவத்தினால் விசாரிக்கப்பட்டார்.[45] "கஷ்டங்களும், அத்தகைய அடக்குமுறையிலான சூழலும் இருந்த போதிலும், பங்கு மதகுருவாக பிதா சரத்ஜீவன் ஊழியம் செய்த உருத்திரபுரம் தேவாலயத்திற்கு அருகில் இந்த சிறிய நினைவுத் தூணை உள்நாட்டு மக்களால் கட்ட முடிந்தது. நினைவுகூரலுக்கு இரு நாட்களுக்கு முன், உருத்திரபுரம் தூய பாத்திமா தேவாலயத்திற்கு சில படைவீரர்கள் வந்து, பங்கு மதகுருவை விசாரித்தனர். 'எமது நிகழ்ச்சிக்கு வெளியார் வருகின்றார்களா என அவர்கள் கேட்டனர். 17ஆம் திகதியன்று ( மே) யார் வந்தார்கள் என்பதைக் கட்டுப்படுத்துவதற்காக கிளிநொச்சிக்கும், உருத்திரபுரத்திற்கும் இடையில் வீதியில் பெருமளவு படைவீரர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்" என 2010இல் அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அனுஷ்டானங்களில் பங்கெடுத்த வடக்கில் வாழ்கின்றதும், பணியாற்றுகின்றதுமான மதகுரு ஒருவர் தெரிவித்தார்.

---

[42] http://srilankabrief.blogspot.ch/2014/05/why-should-tamils-speaking-of-war-be.html (Last accessed on 10th June 2014)
[43] http://srilankabrief.blogspot.ch/2014/05/why-should-tamils-speaking-of-war-be.html (Last accessed on 10th June 2014)
[44] http://www.sundaytimes.lk/140525/news/juta-president-dr-rasakumaran-decries-tid-questioning-for-organising-commemoration-ceremony-100254.html (Last accessed on 10th June 2014)
[45] http://www.asianews.it/news-en/In-the-north,-Tamils-defy-government-to-remember-Fr-Sara,-who-died-during-the-Civil-War-31197.html (Last accessed on 10th June 2014)